# இந்திய மொழிகளில் நிகண்டுகள்

# Nikands in Indian Languages

***முனைவர் க. விஜயராகவன்***
தலைவர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேலம்

**Dr. G. Vijayaragavan**
*Head, Department of Tamil*
*Sona College o Arts and Science, Salem*

**ஆய்வுச் சுருக்கம்**

*ஒரு மொழியின் சிறப்பை அதன் வளம் குறையாமல் உணர வேண்டுமெனில் அம்மொழியில் தோன்றும் சொற்களின் திறம் தெளிவுபட உணரப்படல் வேண்டும். அவ்வாறு இலக்கியங்கள் கூறும் கருத்துக்களைத் தெளிவுபட உணர்ந்து கொள்வதற்கு சொற்களின் பொருள் உணர்த்தும் நிகண்டுகளும், அகராதிகளும் பலபின்நாளில் தோற்றம் பெற்றன. அகராதிகளைக் காட்டிலும் நிகண்டுகள் சிறப்பான நிலையில் பேசப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. பலநிகண்டுகள் வரலாற்றை நமக்கு முன்னிறுத்திக் காட்டுவதில் குறிப்பிடத்தக்கவை. அந்த வகையில் இந்தியமொழிகளில் தோன்றி மொழிக்கு வளம் சேர்த்த நிகண்டுகளை இக்கட்டுரை அடையாளப்படுத்திக் காட்டுகிறது.*

***முக்கியச் சொற்கள்:***

*வேதாங்கம், சீஷா, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிடம்,தந்திரம், ஷேத்திரக் கணிதம், கல்பம், மணிமாலை, ஸ்கந்தம், தரங்கம், வர்கம், சருக்கம், பரிச்சேதம், ஆஸ்வாசம் போன்றவை.*

**Abstract**

*In order to realize the significance of a language without diminishing its richness, the skill of the words appearing in that language must be clearly perceived. Numerous dictionaries and lexicons later appeared that conveyed the meaning of words in order to make sense of the ideas expressed in the literature. It is noteworthy that Nikands were better spoken than dictionaries. Many Nikands are significant in presenting us with history. In that sense, this article identifies the Nikands who appeared in Indian languages and enriched the language.*

***Keywords:***

*Vedangam, Seesha, Viyaagarnam, Santhas, Niruktam, Astrology, Tantra, Sethirak Mathematics, Kalpam, Manimalai, Skandam, Tharangam, Vargam, Sarukkam, Parichedam, Asvasam etc.*

**Citation**

Vijayaragavan, G. "Nikands in Indian Languages." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 2, 2021, pp. 48–54.

CC BY SA

https://doi.org/10.5281/zenodo.20327614

*''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்கிறது தொல்காப்பியம். பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே இந்திய மொழிகளில் சொற்களைத் தொகுத்து அவற்றுக்கு பொருள் சுட்டுகின்ற முறை தொடங்கிவிட்டது. பாலி, பிராகிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், போன்ற இந்திய மொழிகளில் யாப்பு நடையில் நிகண்டுகள் தோன்றியுள்ளன. இவற்றுள் சில நிகண்டுகள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன. வேதங்கள் மிகத் தொன்மையான காலத்தவை. வேதங்களின் உறுப்புகள் வேதாங்கம் என்று அழைக்கப்படும். இது ஆறு கூறுகளை உள்ளடக்கியது. உச்சரிப்பு முறைகளை விளக்கும் சீஷா, இலக்கணம் கூறும் வியாகரணம், செய்யுள் இலக்கணம் கூறும் சந்தஸ், சொல் இலக்கணம் கூறும் நிருக்தம், வான சாஸ்திரம் இயம்பும் ஜோதிடம், செயல் முறை, கிரியைகளுக்கேற்ற தந்திரம், வேள்வி விளக்கம்,வேள்விச் சாலை அமைக்க வேண்டிய ஷேத்திரக் கணிதம் ஆகியவை அடங்கிய கல்பம் ஆகிய இவற்றை ஆறு சாத்திரங்கள் என்பர்.*

*நிருக்தம் வேதத்தின் வேர்ச் சொல்லகராதி ஆகும். நிருக்தம் ஒவ்வொரு சொல்லின் வேரையும் கண்டெடுத்துக் கொடுக்கிறது. வேத மொழியில் உள்ள கடினமான சொற்களுக்கு மூலம் மற்றும் பொருள் தருவதுடன், அன்றாட பயன்பாட்டில் உள்ள சொற்களையும் அசை பிரித்து அவற்றின் மூலப் பதங்களை விளக்கி, ஏன் குறிப்பிட்ட பொருளில் ஒவ்வொரு சொல்லும் பயன்படுத்தப்படுகிறது என்பதை விளக்குகிறது. வேதத்தின் காது, தெய்வத்தின் குரல், வேதத்துக்கு அகராதி என்றெல்லாம் நிருக்தத்தை அழைக்கின்றனர். ஒவ்வொரு வார்த்தையும் இந்தத் தாதுவிலிருந்து வந்தது என்று அக்ஷர அக்ஷரமாக பிரித்து ஒவ்வொரு அக்ஷரத்துக்கும் அர்த்தம் பகருகிறது நிருக்தம். நிருக்தத்தின் உட்பிரிவு நிகண்டு. கி.மு. 700- க்கு முந்திய காலகட்டத்தில் யாஸ்கர் இயற்றிய வேதாங்க நிருக்தமே முதலில் தோன்றிய நிகண்டு. கி.பி.8 நூற்றாண்டில் தமிழ் மொழியில் சேந்தன் திவாகரமும், கி.பி.10ஆம் நூற்றாண்டில் கன்னட மொழியில் இரன்ன கந்தமும் தோன்றியது. பிராகிருதத்திலும் பாயலச்சி நாமமாலை என்னும் நிகண்டினை இதே காலகட்டத்தில் தனபாலர் இயற்றினார். கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அபிதானப்ப தீபிகை என்னும் நிகண்டு இயற்றப்பட்டது. தெலுங்கில் கி.பி.17ஆம் நூற்றாண்டில் சௌடப்ப சீசமுலு என்னும் நிகண்டு தோன்றியது. இதில் பிராகிருதத்தின் சொற்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சமஸ்கிருத மொழியில் உள்ள நிகண்டுகள் பொருளடக்கத்திலும், வடிவத்திலும், முறையிலும் பலவாறு கிளைத்து வளர்ச்சி பெற்றன.*

*இம்மொழி நிகண்டுகளின் தாக்கம் இந்திய மொழிகள் பலவற்றிலும் நாளடைவில் தவிர்க்க இயலாத ஒன்றாக அமைந்தது. இந்திய மொழிகளிலேயே சமஸ்கிருதத்தில் தான் மிகுந்த எண்ணிக்கையிலான நிகண்டுகள் தோன்றியுள்ளன. பல மாநிலத்தைச் சேர்ந்தோரும் சமஸ்கிருத மொழியில் நிகண்டுகளை இயற்றியுள்ளார்கள். இதன் காரணமாக இந்திய மொழிகளில் சமஸ்கிருத மொழியில் தோன்றிய நிகண்டுகள் பிற்காலத்தில் தோன்றிய மற்ற மொழியில் உள்ள நிகண்டுகளுக்கு முன்மாதிரியாக விளங்கின. தமிழ்மொழி தவிர்த்த பிற மொழிகளில் தொடக்க காலத்தில் தோன்றிய நிகண்டுகள் தத்தம் மொழியில் கலந்து சமஸ்கிருத மொழியில் பொருள் சுட்டுவதாக அமைந்தன. இம்முறையில் தமிழ் மொழியில் பிங்கல நிகண்டு அமைந்துள்ளது. முதல் நிகண்டாகிய சேந்தன் திவாகரத்தை விடவும் பிங்கல நிகண்டில் சொற் தொகை கூடியதற்கு இதுவும் ஒரு காரணம்.*

**அகராதி - நிகண்டு**

*அகராதி என்பது ஒரு சொல்லுக்கான பொருளைத் தருவது. அது அகர வரிசையிற் தரப்பட்டிருக்கும். இங்கே பொருள் என்பது இன்னொரு மொழியிலும் கூடத் தரப்பட்டிருக்கலாம். ஆங்கிலத்தில் அதற்கு* Dictionary *என்று பெயர் சுட்டப்படுகிறது.*

*நிகண்டு என்பது ஒரு சொல்லுக்கான பல இணைச்சொற்களையும் சில சமயங்களில் எதிர்ச்சொற்களையும் கூடத் தருவது. சிலசமயங்களில் அது அகர வரிசைப்படியும் சிலசமயங்களிற் கருப்பொருள்கள் ஒரு திரளாகவும் கூட அமையலாம். இங்கே ஒரே ஒரு மொழி மட்டுமே பாவிதத்தில் இருக்கும் ஆங்கிலத்தில் அதற்கு* Thesaurus *என்று பெயர் சுட்டப்படுகிறது.*

**நிகண்டுகளின் பெயர்கள்**

**இந்திய மொழி**

*நிகண்டுகள் பெரும்பாலும் ஒரு பொருள் குறித்த பல பெயர் சொற்கள். பல பொருள் குறித்த ஒரு பெயர்ச் சொற்கள் என்னும் இரு வகையில் பெயர்களைக் கொண்டுள்ளன. சமஸ்கிருத நிகண்டுகளில் தம் பெயர்களின் இறுதியில் நிகண்டு,*

*சோகம், நாம மாலை, இரத்தின மாலை, இரத்தினம் மஞ்சரி, இரத்தினா கரம், இரத்தினவளி, மஞ்சரி, சந்திரிகா, பஞ்சிகா, விவேகம், பிரதீபம், பிரகாசம், சிந்தாமணி, காமதேனு, அபிதானம், சங்கிரகம், சம்ஷேபம், கறம், உத்காண்டனம், ஆர்ணவம், சர்வஸ்வம்*

*போன்ற பெயர்களுடன் விளங்குகின்றன.*

**தமிழ்மொழி**

*தமிழில் உள்ள நிகண்டு நூல்களின் பாவகை அமைப்பு பற்றி மு. சண்முகம்பிள்ளை கூறும் போது, முதலில் வந்த நிகண்டு நூல்கள் நூற்பாவினால் அமைக்கப்பட்ட போதிலும் காலப்போக்கில் மனப்பாடஞ் செய்வதற்கு எளிதாக இருத்தலைக் கருதி வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் முதலிய பாவகைகளாலும் நிகண்டு நூல் செய்வாராயினர். வெண்பா யாப்பில் அமைந்தவை உரிச்சொல் நிகண்டும் நாமதீப நிகண்டும் ஆகும். கட்டளைக் கலித்துறையில் இரண்டு நிகண்டுகள் உள. ஒன்று கயாதரம் மற்றொன்று பாரதிதீபம். விருத்தபாவில் அமைந்த நிகண்டுகளுள் சூடாமணி நிகண்டு முதன்மையாகக் கொள்ளத்தக்கது. அரும்பொருள் விளக்க நிகண்டு, பொதிகை நிகண்டு நாநார்த்த தீபிகை போன்றவை இவ்வகையின என்கிறார். மேலும்,*

*தமிழ் இலக்கணங்கள் பெரும்பாலும் நூற்பா யாப்பைப் பயன்படுத்தியதைப் போலவே தொடக்க கால நிகண்டுகளும் நூற்பா யாப்பைப் பின்பற்றியுள்ளன. பின்னர் படிப்படியாக வெண்பா, ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை, பல்வகை யாப்பு எனக் கால மாற்றத்திற்கு ஏற்றார்போல் நிகண்டுகள் பா வகையினையும் இனத்தையும் பயன்படுத்தியுள்ளன.*

*இத்தகைய பாவகைப் பயன்பாடுகள் அக்காலத்தைய கல்வியின் மனப்பாடப் பயிற்சிக்கு மிகவும் இன்றியமையாததாக அமைந்தன. மனப்பாடப் பயிற்சியில் சொற்களை எளிதில் பயில எதுகை என்ற யாப்பியல் கூறு பேருதவி புரிந்தது.*

*கவிபாடும் மரபில் கடைப்பிடிக்கப்பட்ட இவ்வகையான யாப்பியல்சார் இலக்கணக் கூறுகள் நிகண்டுகளை உருவாக்குவதற்கு வழி வகுத்ததைப் போலவே இவற்றில் சில பா, பாவகை சார்ந்த பதிவுகளும் இடம் பெற்றுள்ளன என்று தனது கருத்துரையை முன்னிறுத்துகிறார்.தமிழ் மொழியிலுள்ள நிகண்டுகளின் பெயர்கள் நிகண்டு, தீபம், மணிமாலை போன்று அமைந்துள்ளன.*

**காலவரிசையில் நிகண்டுகள்**

*700களுக்கு முன்பு: உரிச்சொற் பனுவல் 700*
*சேந்தன் திவாகர நிகண்டு - சேந்தன் ஆதரவில் திவாகரர் இயற்றியது - 9500 சொற்கள்*
*பிங்கல நிகண்டு பிங்கல முனிவர் இயற்றியது - 14700 சொற்கள்*
*900 பிங்கல நிகண்டு பிங்கலர் இயற்றியது - 15800 சொற்கள்*
*1300 உரிச்சொல் நிகண்டு காங்கேயர் இயற்றியது - 3200 சொற்கள்*
*1400 கயாதர நிகண்டு - கயாதரர் இயற்றியது - 11350 சொற்கள் பாரதி தீபம் - திருவேங்கட பாரதி இயற்றியது*
*1500 சூடாமணி நிகண்டு - மண்டலபுருடர் - 1575 சொற்கள் அகராதி நிகண்டு - இரேவண சித்தர் இயற்றியது*
*1600 ஆசிரிய நிகண்டு - ஆண்டிப்புலவர் இயற்றியது - 12000 சொற்கள் கைலாச நிகண்டு சூளாமணி - 15000 பெயர்கள்*
*1700*
*1732 - சதுரகராதி - வீரமாமுனிவர் இயற்றியது - அகராதி நிகண்டு வகை 1763 - அரும்பொருள் விளக்க நிகண்டு-அருமருந்தைய தேசிகர் இயற்றியது-அகராதி நிகண்டு*
*வகை - 3200 சொற்கள்*
*பொதிகை நிகண்டு - சாமிநாத கவிராயர் இயற்றியது - அகராதி நிகண்டு*
*வகை பொருள் தொகை நிகண்டு- சுப்பிரமணிய பாரதி இயற்றியது-1000 தொகைப் பெயர்கள் விளக்கம்*
*பல்பொருட் சூடாமணி - ஈசுர பாரதியார் இயற்றியது - அகராதி நிகண்டு வகை*
*உசிதசூடாமணி - சிதம்பரக் கவிராயர் இயற்றியது - அகராதி நிகண்டு வகை*
*1800*
*1849 - தொகைப் பெயர் விளக்கம் - வேதகிரி முதலியார் வெளியிட்டது*
*1850 - நாநார்த்த தீபிகை - முத்துசாமிப் பிள்ளை இயற்றியது ? - 12 000 சொற்கள் ஜ/ஸ*
*1876 - சிந்தாமணி நிகண்டு - வைத்தியலிங்கம் பிள்ளை இயற்றியது*
*1878 - அபிதானத் தனிச்செய்யுள் நிகண்டு - கோபாலசாமி நாயக்கர் இயற்றியது நாமதீப நிகண்டு - சிவசுப்பிரமணியக் கவிராயர் இயற்றியது - அகராதி நிகண்டு வகை*
*1900*
*1934 - சூடாமணி நிகண்டு, தொகுப்பாசிரியர், ப. கணேச முதலியார்*
*நவமணிக்காரிகை நிகண்டு - அரசஞ் சண்முகனார் இயற்றியது*
*தமிழுரிச்சொற் பனுவல் - கவிராச பண்டிதர் இராம சுப்பிரமணிய நாவலர் இயற்றியது*
*நீரரர் நிகண்டு - ஈழத்துப் பூராடனார் இயற்றியது*
*2000*
*தமிழ் மின் நிகண்டு*
*சிந்தாமணி நிகண்டு மின்-அகராதி*

**பிற நிகண்டுகள்**

*கொல்லிமலை நிகண்டு, விநாயக நிகண்டு, ஐந்திணை மஞ்சிகன் சிறுநிகண்டு, விரிவு நிகண்டு (அருணாச்சலநாவலர் இயற்றியது), கந்தசாமி நிகண்டு (சுப்ரமணிய தேசிகர் இயற்றியது), அகத்தியர் நிகண்டு (அகத்தியர் இயற்றியது - மருத்துவம்), போகர் நிகண்டு (போகர் இயற்றியது - மருத்துவம்), பொதிய நிகண்டு, ஔவை நிகண்டு, இலக்கியத்திறவுகோல் நிகண்டு, ஆரிய நிகண்டு, சரஸ்வதி நிகண்டு சித்த சுவாத நிகண்டு (மூலிகைகள் பற்றிய நிகண்டு) என்று தமிழ் நிகண்டுகளின் தோற்றம் குறித்து கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியா நமக்குச் சான்று பகர்கிறது.*

**தெலுங்கு மொழி - கன்னட மொழி**

*தெலுங்கு மொழியில் கோசம், நிகண்டு, ரத்னாகரம், சங்கிரகம், சதகம், கந்தமுலு, பதநிதானமு, பாஷாணவமு, ஆந்தரமு போன்று அமைந்துள்ளன. கன்னட மொழியில் நிகண்டுகளின் பெயர்கள் சோகம், மாலை, சப்தம், சறம், சப்தமஞ்சரி, அபிதானம், சஞ்ஜிவனம் என்று வழங்கப்படுன்றன. இவற்றுள் தமிழ்மொழி தவிர பிற மொழிகளில் நூல் பெயர்கள் பெரும்பாலும் சமஸ்கிருத சொற்களாகவே இருக்கின்றன.*

**உட்பகுப்புகள்**

*பல மொழிகளில் உள்ள நிகண்டுகள் பலவாறாக பகுக்கப்பட்டுள்ளன. சமஸ்கிருத மொழியில் உள்ள நிகண்டுகள் பல பெரும்பிரிவுகளாகவும் சிறுபிரிவுகளாகவும் பகுக்கப்பெற்றுள்ளன. அப்பகுப்புகளாவன ஸ்கந்தம், உல்லாசம், தரங்கம், வர்கம், சருக்கம், பரிச்சேதம், ஆஸ்வாசம் முதலான பெயர்களுடன் உள்ளன. தெலுங்கு மொழியில், கன்னட மொழியில் நிகண்டுகளின் உட்பகுதியில் பெரிய மாற்றமின்றி சமஸ்கிருத மொழியைப் போலவே உள்ளன. தமிழ் மொழியில் தொகுதி என்னும் பெயரும் பிங்கல நிகண்டில் வகை என்னும் பெயரும்ʹ இடம் பெற்றுள்ளன.*

*நிகண்டுகளை இயற்றுவதில் புலவர்கள் சிலவகை மரபுகளைப் பின்பற்றியுள்ளனர். பொதுவாக எல்லா நிகண்டுகளும் பன்னிரண்டு வகையான உட்பிரிவுகளைக் கொண்டுள்ளபடி வகைப்படுத்தி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.*

*1. தெய்வப் பெயர்த் தொகுதி 2. மக்கட் பெயர்த் தொகுதி 3. விலங்கின் பெயர்த் தொகுதி 4. மரப் பெயர்த் தொகுதி 5. இடப் பெயர்த்தொகுதி 6. பல்பொருட் பெயர்த் தொகுதி 7. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி 8. பண்புப் பெயர்த் தொகுதி 9. செயற் பெயர்த் தொகுதி 10. ஒலிப் பெயர்த் தொகுதி 11. ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி 12. பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி இலக்கண நூல்களுக்கும் நிகண்டுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இலக்கண நூல்களில் முதன்மையானது தொல்காப்பியம். அதில் தொல்காப்பியர் சொல்லாட்சி முறைகள் பற்றி விளக்குகின்றார். அவர் இலக்கணச் சொற்களாகப் பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றையும், செய்யுள்களில் வர்த்தக சொற்களாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றார். நிகண்டுகளில் வரும் சொற்கள் யாவும் தொல்காப்பியர் வகுத்த இந்த எட்டு வகைச் சொற்வகைகளுக்குள் அடங்கும்.*

**நிகண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள யாப்பு வகைகள்**

*சமஸ்கிருத மொழியில் சுலோகங்களால் இயற்றப் பெற்ற நிகண்டுகளின் தொகை மிகுதியாக இருந்தாலும், யாப்பு வகைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் பல வகையான யாப்புகள் வந்துள்ளன. தமிழ் மொழியில் நூற்பா, வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை போன்ற பல ஏடுகளிலும் நிகண்டுகள் இயற்றப் பெற்றுள்ளன. தெலுங்கு மொழியில் சீசபதியங்களும், கந்தயாப்பு, ஆட்டவளத்தி என்னும் யாப்புகளும் கையாளப் பெற்றுள்ளன. சமஸ்கிருத யாப்பில் இயற்றப்பெற்ற தெலுங்கு நிகண்டுகளும் உள்ளன.*

*கன்னட மொழியில் சத்தியப்பததியாப்பும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. கந்த யாப்பு வர்த்தகசத்பதி, விருத்தம் போன்ற யாப்புகளும் பயன்படுத்தப் பெற்றுள்ளன.*

**நிகண்டுகளின் அகரவரிசை**

*சமஸ்கிருத மொழியில் யாதவப் பிரகாசரால் கி.பி.11ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட வைஜயந்தி என்னும் நூலில் தான் முத முதலில் அகர வரிசை சொற்கள் நிரல் படுத்தப்பட்டுள்ளன. இந்திய மொழிகளின் முதல் முயற்சி இதுவே. கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஹேமச் சந்திரரின் அனேகார்த்தா சங்கிரகத்திலும், நாநார்த்த சங்கிராகத்திலும் இம்முயற்சி பின்பற்றப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் அகர நிரல்முறை பல்லவர் காலத்திலேயே கி.பி.7-ம் நூற்றாண்டிலிருந்து அதிகம் பின்பற்றப்பட்டுள்ளது. கன்னட மொழியில் கி.பி.18 நூற்றாண்டில் அகராதி நிகண்டிலும் தெலுங்கு மொழியில் கி.பி.19 நூற்றாண்டில் நாநார்த்த நிகண்டிலும் அகர வரிசை முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**ஓரெழுத்து ஒருமொழி நிகண்டுகள்**

*இந்திய மொழிகளில் தமிழ்,தெலுங்கு, கன்னடம், முதலானவற்றில் தனி நிகழ்வுகள் தோன்றுவதற்குக் காரணம் அவ்வகைச் சொற்கள் மிகுதியும் இம்மொழியில் இல்லை. சமஸ்கிருத மொழியில் ஓரெழுத்தொரு மொழிகளுக்கு ஏகாட்சர கோசம் என்னும் பெயரில் தனியே நிகண்டுகள் தோன்றியுள்ளன. தெலுங்கு மொழியில் ''ஆந்திரப்பதாகரமு'' என்ற நிகழ்வில் ஓரெழுத்தொரு மொழிகளுக்குப் பொருள் உரைக்கப் பெற்றுள்ளது. சமஸ்கிருத மொழியில் ஒரு சொல்லுக்குரிய இரு வடிவங்கள் குறித்த நிகண்டுகள் பலவும் இவ்வகையில் அமைந்துள்ளன.*

*தெலுங்கு மொழியிலும் துவிரூப கோசங்கள் உருவாகின. இந்திய மொழிகள் பிறவற்றில் இத்தகைய நூல்கள் தோன்றவில்லை. சமஸ்கிருத மொழியில் தோன்றிய வேறு சில வகையான உணர்த்தி கோசங்கள், அவ்யய கோஷங்கள் ஏனைய மொழிகளில் தோன்றவில்லை. மலையாள மொழியில் செய்யுள் வடிவில் நிகண்டுகள் எவையும் தோன்றவில்லை. பிற்கால அகராதி அமைப்பில் தோன்றிய நூல்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்மொழி அகராதி நிகண்டு என்னும் பெயரில் ஒரு நிகண்டு இடம்பெற்றுள்ளது.*

*தொடக்க காலத்தில் நிகண்டுகளுக்கு நோக்கு நூல்கள் தோன்றவில்லை. சொல் பொருள்களை மனப்பாடம் செய்வதற்கும் நினைவு கொள்வதற்காகவும் இயற்றப்பட்டன. நூலாசிரியரின் நோக்கங்களுக்காக பலவாறாக நிகழ்வுகள் உருவாக்கப் பெற்றன. ஒரே நாளில் ஒன்றுக்கு*

*மேற்பட்ட தொகுப்பு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. பெயர் பகுப்பு முறையில் அதிகமான நிகண்டுகள் வகைப்படுத்தப் பெற்றுள்ளன. அகரவரிசை முறையானது சொற்களில் உள்ள எழுத்து எண்ணிக்கை அடிப்படையிலும் அசைகளின் எண்ணிக்கை அடிப்படையிலும் பொருள் எண்ணிக்கை அடிப்படையிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது.*

*நிகண்டுகள் மொழியை வளப்படுத்தின. முற்கால கல்வியில் நிகண்டுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சொல் வளத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு நிகண்டுகள் பெரிதும் உதவின. நிகண்டுகள் வெறும் சொற்களைக் கொண்ட அகராதிகள் மட்டுமல்ல. மரபு பற்றியும் இலக்கியங்கள் பற்றியும் பல வகையான தகவல்களை ஓரளவு தெளிவுடன் கொண்டிருந்தன. செயல் செய்வதற்கு இலக்கண அறிவு இன்றியமையாதது. அத்துடன் சொல் வளமும் இருத்தல் வேண்டும். புலவர்கள் இலக்கண நூல்களையும் கலைகளையும் கற்று வந்தனர். இந்திய மொழிகளில் நிகண்டுகள் முதன்முதலில் சமஸ்கிருத மொழியில் தோன்றியிருந்தாலும் தமிழ், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் நிகண்டுகளின் தோற்றம் மற்றும் அவற்றின் வளர்ச்சி போக்குகள் பற்றி ஒப்பீட்டு நோக்கில் நம்மால் ஓரளவிற்கு அறிந்துகொள்ள முடிகிறது.*

**ஆய்விற்கு துணை நின்ற ஆதாரங்கள்**


1. *இளங்குமரனார், இரா. 1999. இலக்கண வரலாறு, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.*
2. *அறவேந்தன், இரா. 1999. தமிழ் சிங்கள இலக்கண உறவு, வணக்கம். சத்தனூர், திருவரசு வெளியீடு.*
3. Ghatage A.M. &others, studies in historical sanskrit lexicography, Deccan college,Poona/ 1973
4. *ஸ்ரீநிவாசன், அமரகோசம், தஞ்சாவூர், சரஸ்வதி மஹால் நூலகம்வெளியீடு.*
5. Dravidan lexicography. 1981. souvenir 08XI All India Conference 08 Dravidan Linguistics, Usmania University.
6. Vaiyapuripillai, S. 1936. History of Tamil lexicography,tamil lexicon volume1, Madras University.


## References


1. *IlangumaranarR, Ilakkana Varalaaru, Chennai, Manivasagar Padhipagam,1999.*
2. *Aravendhan, R, Tamil Singala Ilakkana Uravu, Thayaram Publication, Chennai, 2003.*
3. *Ghatage A.M. &others, studies in historical sanskrit lexicography, Deccan college, Poona/1973.*
4. *Srinivasan, Amarakosam, Tanjore, Saraswathi Mahal Library.*
5. *Dravidan lexicography, souvenir 08XI All India Conference 08 Dravidan Linguistics, Usmania University,1981*
6. *Vaiyapuripillai S, History of Tamil lexicography, Tamil lexicon volume1, Madras University,1936*